**குற்றவியல் நீதித்துறை நடுவர், (விரைவு நீதிமன்றம்), ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**முன்னிலை: திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.**

**நீதித்துறை நடுவர், (விரைவு நீதிமன்றம்), ஓசூர்.**

**2026 - ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24-ம் நாள் செவ்வாய்கிழமை**

**STC.No. 243- 2018**

**CNR.No. TNKI10-000255-2018**

N. நஞ்சுண்டப்பா (வயது 55/2018),
த/பெ.நஞ்சப்பா,
க.எண்.M.I.G, பிளாட் எண்.43,
TNHB, பேஸ் -15, முல்லை நகர்,
ஓசூர் 635 109,
கிருஷ்ணகிரி மாவட்டம். ... புகார்தாரர்

/Vs/

B.G. சம்பங்கி (வயது 35/2018),
த /பெ.B.V.குரப்பா,
எண்.33, பாசூர் கிராமம்,
சிக்கதிருப்பதி அஞ்சல், மாலூர் ரெயில்வே ஸ்டேசன்,
பெங்களூர் Rural, கொசக்கொட்டா தாலுகா,
கர்நாடகா 563 160. ... எதிரி

**சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021-ம் தேதியிட்ட Roc.No.814/2020/RG/F1-ன் படி வழக்கின் சுருக்கம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்ட நாள் | | | Nil |
| 2. | புகார் மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | | | 27.12.2018 |
| 3. | முதன்மை பதிவேட்டு வழக்கு மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள் | | | Nil |
| 4. | எதிரியிடம் கு.வி.மு.ச. 251 பிரிவின் கீழ் வினவிய நாள் | | | 13.12.2022 |
| 5. | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பல்வகை மனுக்களின் விவரம் | | | |
| | குற்றப்பல்வகை மனு எண். | உத்தரவு அனுமதிக்கப்பட்டது / தள்ளுபடி செய்யப்பட்டது | மேல்முறையீட்டு வழக்கு விவரம் | |
| | Crlmp No.1/24, dt:08.04.2024 | அனுமதிக்கப்பட்டது | இல்லை | - |
| | Crlmp No.2/24, dt:08.04.2024 | அனுமதிக்கப்பட்டது | இல்லை | - |
| 6. | சாட்சிகள் விசாரித்த நாட்களின் விவரம் | | | |
| | சாட்சிகள் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் | |
| | திரு. நஞ்சுண்டப்பா (PW1) | 13.04.2023 | 09.08.2024 | பு.சா.1 |
| 7. | எதிரியிடம் கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவப்பட்ட நாள் | | | 26.09.2025 |
| 8. | எதிரி தலைமறைவு ஆகிய நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகிய /ஆஜர்படுத்தப்பட்ட நாட்கள் | | | --- |
| 9. | மாண்புமிகு மேலமை நீதிமன்றத்தின் உத்தரவு படி வழக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால் அதன் விவரம் | | | --- |

| | | |
|---|---|---|
| | மற்றும் தீர்வு | |

இவ்வழக்கு கடந்த 12.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபொழுது, புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.சத்தியநாராயணன் அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.V.அசோகா அவர்களும், ஆஜராகியும் இருதரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது மாற்றுமுறை 08.11.2021 ஆவணங்கள் சட்டம், பிரிவு 138-ன் கீழ் காசோலை மோசடி குற்றத்திற்காக எதிரியை தண்டிக்கக்கோரியும், நஷ்ட ஈடு செலுத்தகோரியும், புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**2) <u>புகார்தாரர் தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u>:-**

எதிரி இராயக்கோட்டை Luk India கம்பெனி எதிர்புறமாக பேக்கரி கடை ஒன்றை நடத்தி வருவதாகவும், புகார்தாரரும், எதிரியும் நண்பர்கள் என்றும், அதனடிப்படையில் எதிரி கடந்த 2016 ம் வருடம் மார்ச் மாதம் புகார்தாரரை அணுகி தனது நிதி உதவிக்காக ரூ.2,63,000/-ஐ கடனாக கேட்டதாகவும், மேற்படி தொகையை 3 முறையாக கடந்த 17.03.2016 ம் தேதியிட்ட ரூ.20,000/-க்கு இந்தியன் வங்கி, முல்லை நகர் கிளை கொண்ட காசோலை எண்.875353 என்ற காசோலை மூலமாகவும், கடந்த

19.03.2016 ம் தேதியிட்ட ரூ.1,50,000/-க்கு இந்தியன் வங்கி, முல்லை நகர் கிளை கொண்ட காசோலை எண்.875356 என்ற காசோலை மூலமாகவும், கடந்த 21.03.2016 ம் தேதியிட்ட ரூ.93,000/-க்கு இந்தியன் வங்கி, முல்லை நகர் கிளை கொண்ட காசோலை எண்.875358 என்ற காசோலை மூலமாகவும், எதிரிக்கு ரூ.2,63,000/- பணம் கொடுத்ததாகவும், மேற்படி தொகையை 5 மாதத்தில் திருப்பி தருவதாக எதிரி உறுதியளித்ததாகவும், மேற்படி தொகையை திருப்பி செலுத்தும் பொருட்டு எதிரி கடந்த 24.10.2018 என்ற பின்தேதியிட்ட Indian Bank, முல்லை நகர் கிளையின் காசோலை எண்.875055 என்ற காசோலையை ரூ.2,63,000/-த்திற்கு (இரண்டு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரம்) புகார்தாரருக்கு கொடுத்ததாகவும், மேற்படி காசோலையை புகார்தாரர் தனது வங்கியான Indian Bank, முல்லை நகர் கிளையில் அதே தேதியில் வசூலுக்கு தாக்கல் செய்ததாகவும், மேற்படி காசோலை அதே தேதியில் Funds Insufficient என்று காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டதாகவும், அதன் பின்னர் 08.11.2018-ம் தேதி புகார்தாரர் எதிரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பியதாகவும், அதை எதிரி பெற்றுக்கொள்ளாமலும், பணத்தை திருப்பி செலுத்தாமலும், பதில் அறிவிப்பு அனுப்பாமலும் இருந்து வந்ததாகவும், எனவே எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142-ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டுமென்றும் புகார்தாரருக்கு நஷ்ட ஈடு வழங்கவேண்டுமென்றும் புகார்தாரர் இந்த வழக்கை எதிரி மீது தாக்கல் செய்துள்ளார்.

3) வழக்கின் அனைத்து ஆவணங்கள், புகார்தாரர் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கை மற்றும் குறித்த கால அளவு மற்றும் நீதிமன்ற ஆள்வரை எல்லை ஆகியவற்றை கருத்தில் கொண்ட பின்னர், வழக்கை கோப்பிற்கு எடுக்க முகாந்திரம் இருந்ததால் வழக்கானது 31.12.2018 -ம் தேதி கோப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, STC எண் வழங்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

4) குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 204(3)-ன் படி வழக்கின் நகல்கள் எதிரிக்கு அழைப்பாணையுடன் அனுப்பப்பட்டுள்ளது.

5) இந்த வழக்கு, அழைப்பாணை வழக்கு என்பதால் குற்றச்சாட்டுகள் வனையப்படவில்லை. மாறாக எதிரி மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றத்திற்காக குற்றம் குறித்து வினவப்பட்ட (Substance of Accusation) போது, புகார்தாரரிடம் வாங்கிய பணத்தை திருப்பி கொடுத்துவிட்டேன் என்றும், செக்யூரிட்டிக்காக காசோலை கொடுத்தேன் என்றும், வழக்கை நடத்த விருப்பம் என்றும் கூறி குற்றத்தை மறுத்ததால் வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

6) இவ்வழக்கில் புகார்தாரர் நஞ்சுண்டப்பா பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>7) புகார்தாரர் தரப்பு சாட்சியின் சுருக்கம்:-</u>**

7.1) புகார்தாரர் தனது சாட்சியத்தில், எதிரி இராயக்கோட்டை Luk India

கம்பெனி எதிர்புறமாக பேக்கரி கடை ஒன்றை நடத்தி வருவதாகவும், புகார்தாரரும், எதிரியும் நண்பர்கள் என்றும், அதனடிப்படையில் எதிரி கடந்த 2016 ம் வருடம் மார்ச் மாதம் புகார்தாரரை அணுகி தனது நிதி உதவிக்காக ரூ.2,63,000/-ஐ கடனாக கேட்டதாகவும், மேற்படி தொகையை 3 முறையாக கடந்த 17.03.2016 ம் தேதியிட்ட ரூ.20,000/-க்கு இந்தியன் வங்கி, முல்லை நகர் கிளை கொண்ட காசோலை எண்.875353 என்ற காசோலை மூலமாகவும், கடந்த 19.03.2016 ம் தேதியிட்ட ரூ.1,50,000/-க்கு இந்தியன் வங்கி, முல்லை நகர் கிளை கொண்ட காசோலை எண்.875356 என்ற காசோலை மூலமாகவும், கடந்த 21.03.2016 ம் தேதியிட்ட ரூ.93,000/-க்கு இந்தியன் வங்கி, முல்லை நகர் கிளை கொண்ட காசோலை எண்.875358 என்ற காசோலை மூலமாகவும், மொத்தம் ரூ.2,63,000/- பணம் எதிரிக்கு கொடுத்ததாகவும், மேற்படி தொகையை 5 மாதத்தில் திருப்பி தருவதாக எதிரி உறுதியளித்ததாகவும், புகாதாரர் வழக்கில் கூறியுள்ளார்.

7.2) மேலும் புகார்தாரர் தனது சாட்சியத்தில், மேற்படி தொகையை திருப்பி செலுத்தும் பொருட்டு எதிரி கடந்த 24.10.2018 என்ற பின்தேதியிட்ட Indian Bank, முல்லை நகர் கிளையின் காசோலை எண் 875055 என்ற காசோலையை ரூ.2,63,000/-த்திற்கு (இரண்டு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரம்) புகார்தாரருக்கு கொடுத்ததாகவும், மேற்படி காசோலையானது பு.த.சா.ஆ.1 எனவும், மேற்படி காசோலையை புகார்தாரர் தனது வங்கியான Indian Bank, முல்லை நகர் கிளையில்

வசூலுக்கு அதே தேதியில் தாக்கல் செய்ததாகவும், மேற்படி காசோலை அதே தேதியில் Funds Insufficient என்று காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டதாகவும், மேற்படி காசோலை திருப்பப்பட்டதற்கான வங்கி குறிப்பாணை பு.த.சா.ஆ.2 எனவும், அதன் பின்னர் 08.11.2018 -ம் தேதி புகார்தாரர் எதிரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பியதாகவும், மேற்படி சட்ட அறிவிப்பானது பு.த.சா.ஆ.3 எனவும், மேற்படி பு.த.சா.ஆ.3 சட்ட அறிவிப்பை எதிரிக்கு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது பு.த.சா.ஆ.4 எனவும், மேற்படி பு.த.சா.ஆ.3 சட்ட அறிவிப்பு எதிரி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டதற்கான அஞ்சலக உறை பு.த.சா.ஆ.5 எனவும், ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, எதிரி அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமலும், பணத்தை திருப்பி செலுத்தாமலும், பதில் அறிவிப்பு அனுப்பாமலும் இருந்து வந்துள்ளதால் எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142-ன் கீழ் குற்றம் புரிந்துள்ளார் எனவும், அவரை தண்டிக்க வேண்டும் எனவும், புகார்தாரருக்கு உரிய நஷ்ட ஈடு வழங்கவேண்டும் எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

8) புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் முடிவடைந்த பின்னர் குற்றவியல் நடைமுறைச்சட்டம், பிரிவு 313 (1) (ஆ)-ன் கீழாக, புகார்தாரர் நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமான சூழ்நிலைகளை எடுத்துக்கூறி எதிரியிடம் வினவப்பட்டபோது, பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் சாட்சிகள் உள்ளது என்றும் கூறியுள்ளார்.

9) இவ்வழக்கில் எதிரி தரப்பில் எந்தவொரு சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. மேலும் எந்தவொரு ஆவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

10) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

11) புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், புகார்தாரர் எதிரிக்கு 3 முறை 3 காசோலைகள் மூலமாக மொத்தம் ரூ.2,63,000/- பணம் கொடுத்திருப்பதாகவும், அந்த பணத்திற்கு எதிரி வழக்கு காசோலையை கொடுத்துள்ளார் என்றும், வழக்கு காசோலை போதிய பணமில்லாமல் திருப்பப்பட்டிருப்பதாகவும், எதிரி பணத்தை திருப்பி செலுத்திவிட்டதாக எதிர்வாதம் செய்துள்ள நிலையில் அதற்கான ஆதார ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றும், எதிரி தரப்பில் எந்த ஒரு சாட்சிய சான்றாவணங்களும் தாக்கல் செய்து எதிர்வாதத்தை நிரூபிக்க தவறிவிட்டதாகவும், மாற்றுமுறையாவணச் சட்டம் பிரிவு 118 மற்றும் 139 பிரிவுகளின் கீழான அனுமானம் புகார்தாரருக்கு ஆதரவாக இருப்பதாகவும், புகார்தாரர் தனது வழக்கை சந்தேகத்திற்கு இடமின்றி நிருபணம் செய்திருப்பதாகவும், எனவே எதிரியை தண்டிக்க வேண்டுமென்றும் கூறி வாதிட்டார்.

12) எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், எதிரிக்கும் புகார்தாரருக்கும் எப்படி பழக்கம் ஏற்பட்டது என்பதை புகார்தாரர் நிரூபிக்கவில்லை என்றும், எதிரி சிக்கதிருப்பதி பாகூரில் குடியிருப்பதாகவும், புகார்தாரர் ஒசூர், முல்லை நகரில்

குடியிருப்பதாகவும், பழக்கம் இல்லாத எதிரிக்கு புகார்தாரர் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும், எதிரி அதற்கு செக்கும் கொடுக்கவில்லை என்றும், மோசடி செய்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், புகார்தாரர் வழக்கை தள்ளுபடி செய்து எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்றும் கூறி எழுத்து மூலமான வாதுரை தாக்கல் செய்துள்ளார்.

**13) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால் வழக்கு காசோலை பு.த.சா.ஆ.1 சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்டதா என்பதும் எதிரியின் மீதான மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றத்தை எதிரி புரிந்துள்ளார் என்பதை புகார்தாரர் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளாரா? என்பதேயாகும்.**

14) இவ்வழக்கில் புகார்தாரருக்கு எதிரிரூ.2,63,000/- (இரண்டு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரம்) தரவேண்டும் என்றும், அதற்கு எதிரி வழக்கு காசோலையை ரூ.2,63,000/-த்திற்கு (இரண்டு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரம்) புகார்தாரருக்கு கொடுத்தார் என்றும் அது "Funds Insufficient" என்று திருப்பப்பட்டதாகவும் புகார்தாரர் வழக்கில் கூறியுள்ளார்.

| | | |
|---|---|---|
| காசோலையில் உள்ள தேதி | : | 24.10.2018 |
| காசோலை வசூலுக்கு செலுத்தப்பட்ட நாள் | : | 24.10.2018 |
| காசோலை திருப்பப்பட்ட நாள் | : | 24.10.2018 |

| | | |
|---|---|---|
| வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்ட நாள் | : | 08.11.2018 |
| வழக்கறிஞர் அறிவிப்பு திருப்பப்பட்ட நாள் | : | 20.11.2018 |
| புகார் தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 27.12.2018 |
| புகார் கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 31.12.2018 |

15) மேற்கூறிய சங்கதிகள் அனைத்தையும் கவனிக்கும்போது மாற்று முறை ஆவணங்கள் சட்டத்தின் கால வரையரைக்குள் (Limitation period or Statutory Limitations) இப்புகாரின் வழக்கு மூலமும், ஏனைய பிற சங்கதிகளும் சரியான முறையில் அமைந்துள்ளது என்பது தெளிவாகிறது. மேலும் இவ்வழக்கில் புகார்தாரரின் வசிப்பிடம் மற்றும் அவரது வங்கிக் கணக்குள்ள வங்கி, பணபரிவர்த்தனை நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் ஆகியவை Indian Bank, முல்லை நகர் கிளை, ஒசூர் நகர காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்டுள்ளது. மேற்படி காவல் நிலையமானது ஒசூர் நகரத்தில் அமைந்துள்ள காரணத்தினால் இப்புகாரானது இந்நீதிமன்றத்தின் ஆளுகை வரம்பிற்குள் (Jurisdiction) அமைந்துள்ளது. இவ்வாறாக, மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142-ன் கீழ் தாக்கல் செய்யப்பபட்டுள்ள இவ்வழக்கின் காலவரையறை (Limitation Period), சட்ட நடவடிக்கைகள் மற்றும் வழக்கு மூலம் (Cause of action) சரியான முறையில் அமைந்துள்ள காரணத்தினாலும், இப்புகாரின் சங்கதிகள் இந்நீதிமன்றத்தின் ஆள்வரை வரம்பிற்குள் (Jurisdiction) அமைந்துள்ளதாலும், இப்புகாரானது இந்நீதிமன்றத்தால் புலன் கொள்ளுதலுக்கு (Taking Cognizance) எடுத்துக்கொள்ளப்பட்டு வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

16) இவ்வழக்கில் புகார்தாரர் நஞ்சுண்டப்பா பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர்

மூலம் பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பு.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள வழக்கு காசோலையைப் பொறுத்து வழக்கு காசோலையை எதிரி புகார்தாரருக்கு கொடுக்கவில்லை என்றோ, வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்தை எதிரி செய்யவில்லை என்றோ எதிரி தரப்பில் மறுத்தளிக்காத நிலையில் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 139-ன் கீழ் வழக்கு காசோலையானது கடனை தீர்க்கும்பொருட்டு எதிரியால் கொடுக்கப்பட்டது என தீர்மானித்து மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழான அனுமானம் புகார்தாரருக்கு ஆதரவாக இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. புகார்தாருக்கு ஆதரவாக இருக்கும் அனுமானத்தை மறுத்தளிக்கவேண்டிய பொறுப்பு எதிரிக்கு உள்ள நிலையில் அந்த மறுத்தளித்தலை எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்வதன் மூலமும், சாட்சிகளை விசாரிப்பதன் மூலமும் மற்றும் ஆவணங்களின் மூலமும் மறுத்தலிக்கலாம்.

17) மேலும் இவ்வழக்கில் எதிரியிடம் குற்றம் குறித்து முதல் முறை வினவப்பட்ட போது "**புகார்தாரரிடம் வாங்கிய பணத்தை திருப்பி கொடுத்துவிட்டேன் என்றும், செக்யூரிட்டிக்காக காசோலை கொடுத்தேன் என்றும், வழக்கை நடத்த விருப்பம்**" என்றும் கூறியுள்ளார். மீண்டும் 313 (1) (b) ன் கீழாக புகார்தாரரின் சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக இருக்கும் சூழ்நிலைகளை எதிரியிடம் விளக்கி கேட்ட போது "**பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும்,**

**தனது தரப்பில் சாட்சிகள் உள்ளது"** என்றும் கூறியுள்ளார்.

18) இந்த வழக்கில் எதிரி வழக்கு காசோலையையும், காசோலையில் உள்ள கையெழுத்தையும் மறுக்கவில்லை. மேலும் எதிரி புகார்தாரரிடம் பணம் வாங்கவில்லை என்றும் குறிப்பிட்டு மறுக்கவில்லை. மாறாக புகார்தாரரிடம் வாங்கிய பணத்தை திருப்பி செலுத்திவிட்டதாகவும், செக்யுரிட்டிக்காக காசோலை கொடுத்ததாகவும் எதிரி எதிர்வாதம் செய்துள்ளார். ஆனால் எதிரி புகார்தாரரிடம் எந்த தேதியில் எவ்வளவு பணம் வாங்கினார் என்றோ, எந்த தேதியில் எவ்வளவு பணத்தை திருப்பி செலுத்தினார் என்றோ குறிப்பிட்டு எந்த எதிர்வாதமும் செய்யவில்லை. மேலும் எதிரி பணத்தை திருப்பி செலுத்திவிட்டார் என்பதற்கு எதிரி தரப்பில் எந்த சாட்சிய சான்றாவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

19) மேலும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்த போது எதிரிக்கு புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்ய 11.05.2023, 08.06.2023, 06.07.2023, 27.07.2023 மற்றும் 17.08.2023 ஆகிய தேதிகளில் போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டும் எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்க விசாரணை செய்ய முன்வராததால் பு.சா.1 ன் குறுக்கு விசாரணை 17.08.2023 ம் தேதி முடித்து உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் எதிரி தரப்பில் 03.04.2024 ம் தேதி பு.சா.1 ஐ மீண்டும் அழைத்து குறுக்குவிசாரணை செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனுக்கள் Crl.M.P. Nos.1/2024, 2/2024 08.04.2024 ல் அனுமதிக்கப்பட்டும் எதிரி தரப்பில் 4 மாதங்கள் கழித்து தான் 09.08.2024 ம் தேதி பு.சா.1

ஐ குறுக்கு விசாரணை செய்துள்ளார்கள்.

20) மேற்படி எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்த போது எதிரி ரூ.1,40,000/- வட்டி கொடுத்ததாகவும், 24.03.2017-ல் எதிரி ரூ.2,57,500/-ஐ திருப்பி கொடுத்துவிட்டதாகவும், 13.03.2017-ல் எதிரி ரூ.20,000/-ஐ திருப்பி கொடுத்துவிட்டதாகவும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி எதிர்வாதங்களை எதிரி தரப்பில் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி புகார்தாரரிடம் இருந்து பெற்ற பணத்தை திருப்பி கொடுத்துவிட்ட நிலையில் செக்யுரிட்டிக்காக புகார்தாரரிடம் கொடுத்த காசோலையை திரும்ப பெற எதிரி எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்காதது குறித்து எதிரி தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. மாறாக புகார்தாரர் தனது சாட்சியத்தில் எதிரிக்கு 17.03.2016-ல் ரூ.20,000/-மும், 19.03.2016 ல் ரூ.1,50,000/-மும், 21.03.2016 ல் ரூ.93,000/-மும் காசோலைகள் மூலமாக கொடுத்ததாக தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி புகார்தாரர் தனது வழக்கை தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்திருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

21) மேலும் எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்த போதும், எதிரி நீதிமன்றத்தில் வழக்கு குறித்து கேட்ட போதும் புகார்தாரரிடம் வாங்கிய பணத்தை திருப்பி செலுத்திவிட்டதாகவும், வழக்கு காசோலையை செக்யுரிட்டிக்காக

கொடுத்ததாகவும் எதிர்வாதம் செய்துவிட்டு, எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்து மூலமான வாதுரையில் எதிரிக்கும், புகார்தாரருக்கும் எப்படி பழக்கம் ஏற்பட்டது என்பதை புகார்தாரர் நிரூபிக்கவில்லை என்றும், பழக்கம் இல்லாத எதிரிக்கு புகார்தாரர் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றும், அதற்காக எதிரி செக்கும் கொடுக்கவில்லை என்றும் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட எதிர்வாதத்தை எடுத்துரைத்திருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

22) இவ்வாறாக புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் அனுமானத்தை எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்வதின் மூலமும், சாட்சிகளை விசாரிப்பதன் மூலமும், ஆவணங்களை தாக்கல் செய்வதன் மூலமும், மறுத்தளிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

23) The Hon'ble Apex court has also held in **Rohitbhai Jivanlal Patel Vs State of Gujarat and another reported in (2020) 3 SCC (cri) 575** that the accused leads evidence to rebut presumption by probable defense is not adequate.

24) It has also been held in **Bir Singh V.Mukesh Kumar (2019) 4 SCC 197** that, a blank signed cheque leaf, voluntarily signed and handed over by the accused to the complainant, which is towards some payment, would attract presumption under Section 139 of the NI Act, in the absence of any cogent evidence to show that

the cheque was not issued in discharge of a debt.

25) It has also been held in **Rangappa Vs Sri Mohan AIR 2010 SC 1898** that, The presumption referred to in Section 139 of N.I Act is a mandatory presumption and not a general presumption. The burden upon the defendant of proving the non-existence of the consideration can be either direct or by bringing on record the preponderance of probabilities by reference to the circumstances upon which he relies. In case, where the defendent fails to discharge the initial onus of proof by showing the non-existence of the consideration, the plaintiff would invariably be held entitled to the benefit of presumption arising under Section 118(a) in his favour. The bare denial of the passing of the consideration apparently does not appear to be any defence. Something which is probable has to be brought on record for getting the benefit of shifting the onus of proving to the plaintiff. To disprove the presumption, the defendant has to bring on record such facts and circumstances upon consideration of which the court may either believe that the consideration did not exist or its non-existence was so probable that a prudent man would, under the circumstances of the case, act upon the plea that it did not exist.

26) மேற்படி முன் தீர்ப்புகளையும், மேற்படி விவரங்களையும் இந்நீதிமன்றம் கருத்தில்கொண்டு பார்க்கும்பொழுது எதிரி தரப்பில் சொல்லியுள்ள எதிர்வாதங்களை

தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவுகள் 118 மற்றும் 139-ன் கீழான அனுமானத்தை புகார்தாரருக்கு அளித்து புகார்தாரர் தனது வழக்கை நிரூபணம் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேற்சொன்ன விவரங்களை கருத்தில் கொண்டு பார்க்கும்போது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவுகள் 139 மற்றும் 118 (அ)-ன் கீழ் எதிரி முரண்பாடுகளை மெய்ப்பிக்கவில்லை என்றும் மெய்ப்பிக்கும் பொறுப்பானது புகார்தாரரின் மீது எதிரியால் மறுக்கத்தக்க சாட்சியங்கள் மற்றும் சாத்தியக்கூறுகள் வாயிலாக திருப்பப்படவில்லை என்றும், இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றம் புரிந்தவர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இது அழைப்பாணை வழக்கு என்பதால் தண்டணைக் குறித்த விவரங்கள் கு.வி.மு.ச. பிரிவு 248 (2)-ன் கீழ் எதிரியிடம் வினவப்படவில்லை.

27) வழக்கு காசோலையை பொறுத்து எதிரிக்கு சட்டப்படியாக செயல்படுத்தக்கூடிய கடன் மற்றும் கடப்பாடு உள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு - 138 ன் கீழ் குற்றம் புரிந்தவர் என்று தீர்மானிக்கிறது.

28) முடிவாக,

எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றவாளி என

தீர்மானித்து மேற்படி குற்றத்திற்காக குற்றவாளிக்கு 6 மாத கால மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும் மற்றும் வழக்கு காசோலையின் இரட்டிப்பு மதிப்பான ரூ.5,26,000/-ஐ (ஐந்து லட்சத்து இருபத்தாறாயிரம் மட்டும்) அபராத தொகையாக புகார்தாரருக்கு கு.வி.மு.ச.357-ன் கீழ் 2 மாதத்திற்குள் இழப்பீடாக வழங்கவும், அபராதத்தை கட்ட தவறினால் மேலும் ஒரு மாத காலம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும் உத்திரவிடப்படுகிறது.

29) இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் இல்லாததால் அது குறித்த எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 24 -ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம் - திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஓசூர்.

**புகார்தாரர் தரப்பு சாட்சி:**

1) பு.சா.1 - திரு. நஞ்சுண்டப்பா - புகார்தாரர்

**புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| 1) | 24.10.2018-ம் தேதியிட்ட ரூ.2,63,000/- (875055) க்கான Indian Bank வங்கியின் காசோலை (எண்ணிக்கை 1) - அசல் | பு.த.சா.ஆ.1 |
| 2) | 24.10.2018 -ம் தேதியிட்ட காசோலை திருப்பப்பட்டதற்கான வங்கி குறிப்பாணை (எண்ணிக்கை 1) - அசல் | பு.த.சா.ஆ.2 |
| 3) | 08.11.2018 -ம் தேதியிட்ட சட்ட அறிவிப்பு அலுவலக – நகல் | பு.த.சா.ஆ.3 |
| 4) | சட்ட அறிவிப்பு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது - அசல் | பு.த.சா.ஆ.4 |
| 5) | சட்ட அறிவிப்பு திருப்பப்பட்டதற்கான அஞ்சலக உறை - அசல் | பு.த.சா.ஆ.5 |

**எதிரி தரப்பு சாட்சி :இல்லை**

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்:இல்லை**

**சான்று பொருட்கள்: இல்லை**

ஒம் - திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஒசூர்.

**குறிப்புகள்:**

1. எந்த சாட்சியும் மூன்று முறைக்கு மேல் விசாரணைக்காக அழைக்கப்படவில்லை.
2. வழக்கு முடிவடைந்ததை பற்றி புகார்தாரருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. தீர்ப்பின் நகல் எதிரிக்கு வழங்கப்பட்டது.